# கடற்கரை கவியரங்கு எண் - 627

நாள் **02-07-2023**



# வாழ்வியல் அறிவோம்!

வாழ்வியல் களந்தன்னில் வருந்தாத மனமே வெல்லும்!
ஆழ்மனச் சிந்தையாவும் அழகுடன் மிளிர்தல் வேண்டும்!
சூழ்நிலைக் கதைகள் யாவும் சோம்பலின் நிலையே ஆகும்!
பாழ்படும் நிலைகளெல்லாம் பயனிலா சிந்தையால் ஆகும்!

பந்தயக் குதிரை என்றும் பக்கத்தில் பார்த்தால் தோற்கும்!
மந்திரச் சொல்லாய் அறிவை மருவின்றிச் செய்தல் வேண்டும்!
தந்திரம் மிக்க மாந்தர் தாம்பெற்ற பெருமைகள் என்ன?
எந்திரம் போன்ற வாழ்வில் எதனால் எதுவோ யாரறிவர்?

குணம் என்னும் குன்றில் நின்றார் குவலத்தை ஆள்வார்தாமே!
பணம்தான் நிலையே என்னும் பரிதாபச் சூழல் வெல்வோம்!
அணிசெய்து மனத்தில்நாளும் அன்பைத் தழைக்கச் செய்வோம்!
பிணியில்லா மனமே யாகில் பேரின்பம் நாளும் தானே சூழும்!

மனந்தன்னில் தெளிவு கொண்டால் மகிழ்வுடன் வாழலாமே!
சினம் தன்னை சேராதிருத்தல் செவ்விய நிலையே ஆகும்!
வனம்தன்னில் பறவையொலி வாழ்க்கையின் பெருமை கூறும்!
தனம் கொள்வார் எவருமின்றி தரித்திரம் நீங்கி வாழ்வோம்!

- **கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்,**
01-07-2023 (இரவு 11.30)

